**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**MCOP.243/2023**

2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20 ஆம் நாள் வியாழன் கிழமை எ.ம.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. மகாலெட்சுமி Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | ஆதித்யவிஸ்வா | த/பெ.: | சேதுராஜன் |
| கிராமம்: | தஞ்சாவூர் | தாலுக்கா: | தஞ்சாவூர் |
| மதம்: | இந்து | தொழில்: | நிர்வாக அதிகாரி, நியூ இந்தியா அசூரன்ஸ் கம்பெனி, தஞ்சாவூர். |
| வயது: | 25 | முகவரி: | தஞ்சாவூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 20.11.2025

**முதல் விசாரணை:–**

நான் இந்த மனுவில் 2ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். நான் எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 01.11.2025 | 1ம் எதிர்மனுதாரர் புகழேந்திக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அஞ்சல் ரசீதியுடன் | அலுவலக நகல் |
| எ.ம.சா.ஆ.2 | 19.11.2025 | வழக்கறிஞர் அறிவிப்பை 1ம் எதிர்மனுதாரர் பெற்றுக்கொண்டதற்காக அஞ்சல் ஒப்புதல் அட்டை | கணினி நகல் |
| எ.ம.சா.ஆ.3 | 21.02.2018 | 1ம் எதிர்மனுதாரர் புகழேந்தி விபத்திற்கு பின்னிட்டு பெறப்பட்ட ஓட்டுநர் உரிமம் | நகல் |

| | | | |
|---|---|---|---|
| எ.ம.சா.ஆ.4 | -- | 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கான காப்பீட்டு பாலிசி | உண்மை நகல் |

2ம் எதிர்மனுதாரருக்கு எதிராக இந்த மனு தள்ளுபடி செய்ய வேண்டுமென பிரார்த்திக்கிறேன்.

__மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :-__

விபத்து சமயத்தில் காப்பீடு இருந்தது என்றால் சரிதான். ஓட்டுநரும், உரிமையாளரும் ஒரே நபர் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எங்கள் நிறுவனத்தில் உள்ள காப்பீடு புகழேந்தி பெயரில் உள்ளது. 18 வயதிற்கு குறைவான மைனர் நபர் மீது காப்பீடு போட முடியுமா என்றால் முடியாது. RC Book-ல் உள்ள நபருக்கு தான் காப்பீடு போட முடியும். நாங்கள் இன்சூரன்ஸ் காப்பீடு செய்வதற்கு எந்தெந்த ஆவணம் தேவை என்றால் RC Book மட்டும் போதும். எங்கள் நிறுவனத்தின் பெயர் நியூ இந்தியா அசூரன்ஸ் அதிகாரி. தஞ்சாவூர் கோட்ட அலுவலகத்தில் நான் நிர்வாக அதிகாரி. ஒரு வாகனத்தை காப்பீடு செய்வதற்கு என்னென்ன ஆவணங்கள் கொடுக்க வேண்டும் என்று சொன்னால் RC Book, ஏதேனும் ஒரு அடையாள அட்டை கொடுத்தால் போதும். இந்த வாகனத்திற்கு என்ன அடையாள அட்டை கொடுக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாகனத்திற்கு காப்பீடு செய்தபோது என்ன நடைமுறை பயன்படுத்தினார்கள் என்றும், அது தொடர்பான அலுவலகத்தில் உள்ள ஆவணங்களை நான் பார்வையிடவில்லை என்றால் சரிதான். இந்த

வழக்கிற்கு எங்கள் நிறுவனத்தின் மூலமாக புலன் விசாரணை செய்யப்பட்டுள்ளதா என்றால் செய்யப்பட்டுள்ளது. சங்கரலிங்கம் என்ன வேலை பார்க்கிறார் என்றால் வேலை சம்பந்தமாக எந்த ஆவணங்களும் இல்லை. எங்கள் நிறுவனத்தில் புலன் விசாரணை செய்த அறிக்கையை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1ம் எதிர்மனுதாரர் இளவர் கிடையாது என்றும், எங்கள் நிறுவனத்தில் 1ம் எதிர்மனுதாரர் இளவர் என கட்சி செய்தால் சேவை குறைபாடு உறுதியாகும் என்றால் சரியல்ல. எங்கள் நிறுவனத்திலிருந்து 1ம் எதிர்மனுதாரருக்கு அனுப்பிய அறிவிப்பில் எந்த இடத்திலும் இளவர் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக எங்கள் நிறுவனத்தில் சாட்சியம் அளிக்க அத்தாச்சி வழங்கப்பட்டுள்ளதா என்றால் சரிதான். சாட்சி தன்னிச்சையாக எடுத்து ஆஜர் செய்த ஆவணம் அதிகார ஆவணம் என்று சொன்னால் சரிதான். அந்த ஆவணம் **எ.ம.சா.ஆ.5** ஆகும். எ.ம.சா.ஆ.5 ஆவணம் எவ்வித பூர்த்தியும் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி ஆவணத்தில் வழக்கு எண், நீதிமன்றம் பெயர் இல்லை என்று சொன்னால் சரிதான். தஞ்சாவூர், SUITHUB Manager SR.No.22365, பி.ஜெயஸ்ரீ என்பவர் எந்தவித பூர்த்தி செய்யாத ஆவணத்தில் இரண்டு இடத்தில் நியூ இந்தியா அசூரன்ஸ் நிறுவனத்திற்காக கையெழுத்து போட்டுள்ளார் என்று சொன்னால் சரிதான். இந்த விபத்திற்கு

இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. எங்கள் கட்சிப்படி 1ம் எதிர்மனுதாரர் மைனர் ஆக இருந்தாலும், இல்லாவிட்டாலும் காப்பீடு அவரது பெயரில் உள்ளதால் எங்கள் நிறுவனம் இழப்பீடு தொகை கொடுக்க கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல. மனுவில் உள்ள மனுதாரரின் வயது, வருமானம், தொழில், காயம் அனைத்தும் உண்மை என்பதால் அது குறித்து எந்த கட்சியும் இல்லை என்றால் சரியல்ல. மனுதாரருக்கு விபத்தானது எங்கள் நிறுவனத்தால் காப்பீடு செய்யப்பட்ட வாகனத்தால் ஏற்பட்டது என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையில் அவ்வாறு தான் உள்ளது. இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க எவ்வித அதிகாரமும் இல்லாததால் முகாந்திரம் கிடையாது என்று சொன்னால் சரியல்ல.

<u>1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

நான் இந்த MCOP 243/2023 வழக்கில் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.5 ஆவணத்தில் வழக்கு எண், மனுதாரர்கள், எதிர்மனுதாரர்கள் பெயர்கள், நீதிமன்றத்தின் பெயர் இல்லை என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.1–ன் படி 1ம் எதிர்மனுதாரருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த அறிவிப்பில் 1ம் எதிர்மனுதாரர் மைனர் என்றும், அதற்கான ஆவணத்தை கொடுக்கும்படி கேட்டோமா என்றால் இல்லை. எ.ம.சா.ஆ.2–ல் அஞ்சல் ஒப்புதல் அட்டை

தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். நான் சொல்வது போல் எ.ம.சா.ஆ.2 ஆவணத்தை புகழேந்திக்கு அனுப்பவில்லை என்று சொன்னால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் மைனர் என்பது குறித்து பள்ளியில் கொடுத்த மாற்றுச்சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் DL தாக்கல் செய்துள்ளேன். எ.ம.சா.ஆ.3 ஆவணம் இந்திய சாட்சிய சட்டம் 65(பி)–ன் படி ஏற்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. எ.ம.சா.ஆ.3 ஆவணத்தில் போக்குவரத்து வட்டார அலுவலர் கையொப்பம் இல்லை என்று சொன்னால் கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளதால் கையொப்பம் தேவையில்லை. இந்த விபத்து 20.01.2017–ல் நடைபெற்றதாக உள்ளது என்று சொன்னால் சரிதான். மோட்டார் வாகன சட்டம் பிரிவு 2019, ஜீலை 15–ல் திருத்தம் செய்யப்பட்ட மோட்டார் வாகன சட்டத்தின் படி 18 வயதிற்குட்பட்ட நபர் இருசக்கர வாகனத்தை ஓட்டினால் அவரது பெற்றோரிடமிருந்து இழப்பீடு கோர முடியும் என்றும், இந்த வழக்கில் விபத்து 2017–ல் நடைபெற்றதால் 2019–ல் ஏற்பட்ட சட்டம் இந்த வழக்கிற்கு பொருந்தாது என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல் 1ம் எதிர்மனுதாரர் இளவர் இல்லை என்றும், நான் இந்த வழக்கிற்காக இளவர் என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் உரிய வயது அடைந்ததின் அடிப்படையில் தான் அவருக்கு ஓட்டுநர் உரிமம் மற்றும் RC Book வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால்

சரியல்ல. இந்த விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் காரணம் அல்ல என்றும், எங்கள் நிறுவனம் தான் காப்பீடு கொடுக்க கடமைப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரரோ அல்லது அவரது பெற்றோரோ இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:– இல்லை.</u>**

Typed down to my dictaion, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.